# பகுதி III:
# திரு அவதாரத்திற்குப் பின் அவரது மனிதத்துவம்

*இயேசுவின் தெய்வீகத்துவம் இல்லாமல் நாம் படைக்கப்பட்டிருக்க முடியாதென்றும், அவரது மனிதத்துவம் இல்லாமல் நாம் இரட்சிக்கப் பட்டிருக்க முடியாது என்றும் நாம் கூறியிருக்கின்றோம்.*

*இயேசுவின் தெய்வீகத்துவத்தைக் குறித்து நாம் கணிசமான அளவு கண்டோம். இது எப்படியிருக்க வேண்டுமோ அப்படியே இருக்கின்றது. தேவை இருக்கின்றது. உதாரணத்திற்கு, அமெரிக்காவைக் கவனியுங்கள். "அமெரிக்க வாழ்வில் மதமானது தனது செல்வாக்கை அதிகரித்துள்ளதா அல்லது குறைத்துள்ளதா?'' என்ற கேள்வியுடன் சமீபத்தில் ஒரு வாக்கெடுப்பு நடைபெற்றது. பதில் அளித்தவர்களில் 21 சதவிகிதம் பேர், மதம் தனது செல்வாக்கில் அதிகரித்துள்ளது என்று கூறினார்கள்; 65 சதவிகிதம் பேர், மதம் தனது செல்வாக்கில் குறைந்து வருகின்றது என்று கூறினார்கள். முன்னணியில் உள்ள தேசீய* pollster *ஆன ஜார்ஜ் கேல்லப்,* Jr. *அவர்கள், "அமெரிக்க நாடு வேதாகமக் கல்வியறிவற்றவர்களின் நாடாகும். அமெரிக்கர்கள் பெரும்பாலோர் தாங்கள் எதை அல்லது ஏன் நம்புகின்றார்கள் என்று அறியாதிருக்கின்றனர்" என்று கூறியதாக ஜெஃப்ரி* L. *ஷெலர் அவர்கள் தம்முடைய* "Spiritual America" *என்ற நூலில் கூறுகின்றார். "கிறிஸ்தவத்தை"த் தங்களின் விசுவாசம் என்று அறிக்கையிடும் பலரைப் பொறுத்தமட்டில் அது உண்மையென்றால், கிறிஸ்துவத்தை எந்த வடிவத்திலும் உரிமைகோராமல் இன்றைய நாட்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் கோடிக்கணக்கான மக்களின் நிலை என்ன? ஆம், இயேசுவே குமாரனாகிய தேவன் என்று நம்பச் செய்கின்ற ஆய்வுப் பாடம் ஒன்றை முன் வைப்பது அவசியமாய் இருக்கின்றது.*

*இருப்பினும், நசரேயனாகிய இயேசு நம்மைப் போல் மனிதத்துவத்தில் இருந்தார் என்பதை விளக்குவதன் அவசியத்தையும் நாம் காண்கின்றோம். மன்னிக்கும் மீட்பர் உண்மையிலேயே பாடுபட்டு, சோதனைகளை எதிர்த்து நிலைநின்றார் என்பது பற்றிய புரிந்து கொள்ளுதலை பின்பு எவ்விதத்தில் நாம் பெற முடியும்?*

> *அன்றியும், அவர் ஜனத்தின் பாவங்களை நிவிர்த்தி செய்வதற் கேதுவாக, தேவ காரியங்களைக் குறித்து இரக்கமும் உண்மையுமுள்ள பிரதான ஆசாரியராயிருக்கும்படிக்கு, எவ்விதத்திலும் தம்முடைய சகோதரருக்கு ஒப்பாக வேண்டியதாயிருந்தது. ஆதலால், அவர் தாமே சோதிக்கப்பட்டுப் பாடுபட்டதினாலே, அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவி செய்ய வல்லவராயிருக்கிறார் (எபி. 2:17, 18).*

*தேவன் மாம்சத்தில் உடனுறைய முடியாதாகையால், இயேசு ஆவியில் மட்டுமே இருந்தார் என்று சிலர் போதித்துள்ளனர். இதற்கு மாறாக, இயேசு மாம்சத்தில் இருந்தார். அவர் பசியாய் இருந்தார் (மத். 4:2); அவர் தாகமாய் இருந்தார் (யோவா. 19:28); அவர் இளைப்படைந்தார் (யோவா. 4:6). அவரது பூமிக்குரிய சரீரமானது கண்ணீரை (யோவா. 11:35), வியர்வையை (லூக். 22:44) மற்றும் இரத்தத்தை (யோவா. 19:34) வெளிப்படுத்தியது.*

*இயேசுவோடு இருந்தவர்கள் அவர் ஒரு அசாதாரணமான மனிதராயிருந்தார் என்பதை அறிந்திருந்தார்கள், ஆனாலும் அவர் ஒரு மனிதர் என்பதில் அவர்கள் எவ்வித சந்தேகமும் கொண்டிருந்ததில்லை.*